"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி"

மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்

தருமமே செயம் சத்தியமே நித்தியம்

மலர் 37 | யாழ்ப்பாணம், வயாவிளான் பிரமாதி ளு ஆனி மீ கூ-ந்வ (30-6-39) வெள்ளிக்கிழமை | இதழ் 18

### தோத்திரம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் றிருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா யானிதற் கிலனொர் கைம் மாறே.

(திருநாவுக்கரசுசுவாமிகள்)

# வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு.

(முன்தொடர்ச்சி)

### வல்ல

சுதுமலை -- இப்பெயர் 'சுதுவல்ல' என்பதன் சிதைவுபோலும். 'வல்ல' என்பது மணற்பூமியை. அச்சொல்லிலுள்ள வகரமெய்யின்மேலூர்ந்துநிற்கும் உயிரெழுத்துத் தமிழ் அகரமும் போலாது ஆகாரமும் போலாது சிங்களத்துக்கே சிறப்பாயுள்ளவோரெழுத்தாம். அது தமிழிலே அகரமாகவும் ஆகாரமாகவும் சிறுபான்மை எகாரமாகவும் திரிந்து வழங்கும். பன்னாலையென்னும் பெயரிற்கண்ட ஆலையிலுள்ள ஆகாரம் அச்சிங்கள அக்ஷரத்தின் திரிபேயாம்.

அனுவலையென்று நம்மவர் உச்சாரணஞ்செய்யும் தானப்பெயரிலே சிங்கள 'வல்ல' என்பது தமிழிலே 'வலை' யாமற்றைக் கண்டுகொள்க. வகரம் மகரமாவது தமிழ்மொழியில் நடைபெறுமொரு சாதாரணத் திரிபாம். சுது-வெண்மையான.

துன்மலை- துன்-ஒருமரம். [பெரியவிளான், உடுவில்] | இளமலை- ஈல்ல-ஒருமரம். (கைதடி, அச்சுவேலி)

### கெத்த

தவளகத்தி- (மானிப்பாய்) இப்பெயரிற் கடையேயுள்ள 'கத்தி' கெத்த (வயல்) என்னுஞ் சிங்களச்சொல்லின் சிதைவுபோலும். தவள என்பது 'தவல்ல' என்பதன் சிதைவேபோலும். நீர் குறைந்திருக்கும்போது செய்கைபண்ணப்படும் குளத்தின் மேற்பாகத்தைத் 'தவல்ல' என்பர் சிங்கள மக்கள்.

அரங்கத்தாப்புலம்- (அளவெட்டி) அரன்-அழியாமற் காக்கப்படுங்காடு, கா. காட்டு வயல் என்பதே 'அரன்கெத்த' என்னும் கூட்டு மொழி குறித்த பொருளாகும்.

பொக்கத்தை- [தெல்லிப்பழை] இது போக்கெத்த என்பதன் சிதைவுபோலும். போ-அரசமரம்.

### கண்டி, கண்டிய

முறிகண்டி- (துனுக்காய்) இந்நாமத்தின் கண்ணேயுள்ள 'கண்டி' மத்தியமாகாணத் தலைநகரின் நாமம்போலக் 'கந்த' (மலை, மேடு) என்பதன் சிதைவோ, அன்றி 'அடிக்கண்டிய' வென்னுஞ் சிங்களக் கிராமப்பெயரிற் காணப்படுவதும், ஆற்றங்கரை, வாய்க்காற் கரையிலுள்ள மேட்டுப்பூமியெனப் பொருள்படுவதுமாகிய 'கண்டிய' வென்னுஞ் சொல்லின்சிதைவோ, அன்றேல் வயல்நிலப்பிரிவையுணர்த்துங் 'கண்டிகை' யென்னுந் தமிழ்ச்சொல்லின்கடைக்குறையோ, அல்லாக்கால், நெல் வயலுக்கு நீர்கொண்டுபோக வெட்டிய வாய்க்கால், மேட்டுநிலமென்னும் பொருளுடைய கண்டியென்னும் மலையமாநாட்டுச் சொல்லோவென்னுஞ் சங்கைக்கு இடனாயிருக்கின்றது. ஆயினும் சில இடப்பெயர்களிலே 'கண்டி' என்பது சிங்களச்சொற்களோடுசேர்ந்து நிற்பதனால், அதனை யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களர் வழங்கிவந்தார்களென்பது இழுக்காதாம்.

'கண்டி' என்பதற்குத் தமிழிலே 'கடவை' யென்னுமொரு பொருள் காணப்படுதலின் முறிகண்டி யென்னும் பெயர்க்குக் 'குளமுடைத் தள்ளியகடவான்' எனப் பொருளுரைத்துள்ளார் ஜே. பீ. உலூயிஸ்துரையவர்கள் குளம் முறிந்தது எனல் தமிழ் வழக்கன்மையானும், வெட்டுதலை முறித்தல் எனல் மலையாள வழக்காதலானும், முறியென்பதற்கு அம்மொழியிலே அறை, குடிசை, குறிச்சியென்னும் பொருளுண்மையானும், முறிகண்டி யென்னும் பெயரை இட்டுத் தந்தவர் அத்தேயத்தவரேயென வெண்ணுதல் உசிதமாகும். சிங்களத்திலுள்ள கண்டிய என்னுஞ் சொல்லும் அம்மலையமாநாட்டுக் கண்டியின் திரிபேயாம்.

முறிகண்டி என்னும் பெயரினது பண்டை வடிவம் முறுகண்டியேயாயின் அதனைச் சிங்கள நாமதேயமெனலே சிறப்பாகும். (கண்டி என்பதிலுள்ள இகரத்தைநோக்கி முன்னுள்ள உகரம் இகரமாதல் இயலும்.) முறு- தெய்வம், தேவதை, அமரன்.

பொலிகண்டி- (வட-மே) போலி என்பதற்குச் சிங்களத்திலே பொருள்படாமையால் அதனைத் திராவிடச் சொல்லெனல் தவறாகாது. களத்திலுள்ள மணியைப் பொலியென்பது தமிழர்க்கும் மலையாளிகட்கும் வழக்கமாதலின் பொலியினாற் சிறந்த பூமியைப் பொலிகண்டியெனல் பொருத்தமான பேச்சாம். அஃதே பொலிகண்டியின் உண்மையான பொருளெனின், முறிகண்டிக்கும் நென்முறியாற்சிறந்த பூமியென்று பொருளுரைத்தல்கூடும். (நெல்லுமுறி என்பதை உவின்சிலோ அகராதியிற் பார்க்க.)

போலவீ (ஒருசாதிநெல்) என்னுஞ் சிங்களச்சொல் 'போலி' என மருவியதெனினும் பொருளமையும். வீ-நெல்லு.

கோயிலாக்கண்டி- (தென்மிராட்சி) கோயிலா, கோஹில என்னுஞ் சிங்களச்சொல்லின் சிதைவு 'கோஹில'வென்பது ஒருபூண்டை. அதன் இலையும் தண்டும் கறிக்கேற்றனவாம். வேரும் உணவுக்குரியதென்ப.

பினாட்டுக்கண்டி- (மாந்தை) இப்பெயரின்மாட்டுள்ள 'பினாட்டு' என்பதைப் பனையின் அட்டெனக்கோடல் எட்டுணையும் அமையாதாம். ஆதலான் அதனைப் பன்னெட்டி (ஒருசாதி நெல்லு) என்னுஞ் சிங்களச் சொல்லின் சிதைவென ஊகித்தலே உத்தியாகும்.

களலையக்கண்டி- (கரணவாய்) இது 'கலல கண்டிய' வென்னுஞ் சிங்களப்பெயரின் சிதைவுபோலும். கலலக்கம (குருநாக்கல்) கலலக்கமுவ (கண்டி) என்னும் பெயர்களை நோக்குக. கலல்-சேறு.

(தொடரும்)

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல் சுற்றத்தார் கண்ணே யுள.



துதிவெண்பா

ஞானஞ் சுகஞ்சிதியம் நல்லாயுள் தாவயவை ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப் பேர்க்குமரா னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற் சீர்த்தியுடன்வந்து செகம். [கவெற்குச்

# சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

பிரமாதி ஸ்ரீ ஆனிமீ கசு-ந் உ

## சிங்களர்--தமிழர் வெறுப்பு

சில மாசங்களுக்குமுன் அரசாங்கசபையில் நடந்த அரசாங்க நடபடிக்கை விஷயம் சம்பந்தமாக சிங்களப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் மனக்குரோதம் ஏற்பட்டிருந்தமை பலரறிந்த விஷயமாகும். இந்தவிஷயத்தைக்கொண்டு இலங்கைமக்களாகிய சிங்கள மந்திரிமார் முதலியோர் ஒன்றுகூடி, இலங்கையிலுள்ள இந்தியரை நாடுகடத்தும் நோக்கமாகச் சட்டப்பிரமாணம் நிறைவேற்றியிருப்பதாக அறிகிறோம்.

இவர்கள் இவ்வளவோடமையாது, திரு. பொன்னம்பலமவர்கள் தங்களைப்பற்றிச் சாதித்துவேஷமான வார்த்தைகள் பேசினரெனச்சொல்லி அதன்காரணமாக, பண்டுதொட்டு யாழ்ப்பாணத்தவரால் இலங்கைப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு விக்கிரயமாகிவரும், சுருட்டு, புகையிலை முதலியவற்றைச் சிங்கள மக்கள் வாங்கிப் பாவிக்கக்கூடாதெனக் கூட்டங்கள்கூடி வருகின்றனராம்.

இப்படிக்கூட்டங்களும் பகிஷ்கரிப்புகளும், சிங்களமக்களுக்கும், தமிழ்மக்களுக்குமிடையில் நெடுங்காலமாகவிருந்துவந்த, வியாபார முறையையும், ஒற்றுமையையும் கெடுப்பனவாகவே முடியும்.

காரியம் இப்படியானால் இலங்கைப்பகுதிகளிலிருந்து, யாழ்ப்பாணம்வந்து, தச்சம்க்குத் தெரிந்தனவான, நகைவியாபாரம் மரவியாபாரம், தச்சுவேலை, முதலிய பலவற்றையும் செய்துகொண்டிருக்கும் சிங்களமக்களின் தொழில்களுக்கு பங்கம் நேரிடுமேயென்பதை அவர்களும் யோசிக்கவேண்டும்.

இதைப்பற்றி கொழும்பு 'வீரகேசரி' பத்திரிகை கூறுவது:--

### முதல் நம்பர் சத்துருக்கள்

பொறுப்பும் அறிவுமில்லாத புல்லறிவாளர்களுடைய உளறுபடியென்று இப்பிரசாரத்தை நிராகரித்துவிடமுடியாது இவ்வாறு உளறுகிறவர்களில் இரண்டொருவருக்கு துர் அதிர்ஷ்டவசவாக பாமர சிங்கள மக்களிடையே ஒருவகையான செல்வாக்கு இருக்கின்றது. அச்செல்வாக்கை அவர்கள் துணிகரமாகவும் முன்பின் யோசிக்காமலும் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். சமூகத்துவேஷம் என்றவிஷத்தை விபரம்தெரியாத பாமர ஜனங்களின் மனத்தில் புகுத்தினால் அதன் விளைவு என்னவாகுமென்பதை பர்மாவின் கதையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இந்தியரை எதற்காக பகிஷ்கரிக்கவேண்டும்? அவர்கள் தமது பிரஜா உரிமைகள் வேண்டுமென்று சாத்வீகமான முறையில் கேட்பதும், வாதாடுவதும் பிசகாம்! இதற்காக அவர்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமாம்! இதில் அர்த்தமாவது பகுத்தறிவாவது இருக்கிறதா வென்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கவேண்டும். யாழ்ப்பாண மக்களின் கடைகளை ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்? திரு. பொன்னம்பலம் நாவலப்பிட்டிப் பொதுக்கூட்டமொன்றில் சிங்களச் சமூகத்தின் ஆதி வரலாறு குறித்து ஏதோ பேசினராம். திரு. பொன்னம்பலம் பேசியது சரியா, தவறு என்ற பரிசீலனையில் நாம் இறங்கவிரும்பவில்லை. "சிங்களநண்பர்களின் மனத்தைப் பண்படுத்தவேண்டுமென்றோ, அவர்களை அவமதிக்க வேண்டுமென்றோ நான் எண்ணியதில்லை," என்று திரு. பொன்னம்பலம் பலதடவை பகிரங்கமாகஅறிவித்துக்கொண்டிருக்கிறார். நியாயபுத்தியும், நிதானமுமுள்ளவர்கள் இவ்விவகாரத்திற்கு அவ்வளவுடன் முற்றுப்புள்ளி வைத்திருக்கவேண்டும். துரும்பைத் தூணாக்கி, இல்லாததையும் பொல்லாததையும் விரவிக் கலந்து தமிழ்ச் சாதிக்கும் சிங்களச் சமூகத்திற்குமிடையில் போரைமூட்ட எத்தனிப்பது பயங்கரமான விஷயம். அருமையான இந்த உத்தியோகத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவர்கள் இலங்கைக்கு முதல்நம்பர் சத்துருக்களேன்பதை எவ்வளவு வற்புறுத்தினலும் தகும்.

### உண்மையில் காரணம் எது?

இவ்வளவு கோரமான துவேஷ உணர்ச்சி தோன்றுவதற்கு வாஸ்தவத்தில் காரணம் என்ன? என்பதை ஒவ்வொருவரும் பரிசீலனைசெய்துபார்க்கவேண்டியது அவசியம். திரு. பொன்னம்பலம் எதையோ பேசிவிட்டதால்தான் இவ்வளவும் வந்துவிட்டதேன்று கருதுவது முற்றிலும் சரியல்ல. அரசியல் சீர்திருத்த விவகாரம் என்றைக்கு ஆரம்பமாயிற்றோ அன்றிருந்தே சமூகத்துவேஷம் இலங்கையில் வேரூன்றிவிட்டது. பெரும்பான்மைச் சமூகத்தாரின் எதேச்சாதிகாரத்திற்கு இடங்கொடுக்கமுடியாதென்று தமிழரும், இந்தியரும் ஒற்றுமையாக கர்ஜனை செய்யத் தொடங்கினவுடன், சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஆத்திரமும் துவேஷமும் அதிகரித்துவிட்டன. பதவிகளையும், அதிகாரங்களையும் தம் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் பெரும்பான்மையினர், சிறுபான்மைச் சமூகத்தாரை உதறத் தொடங்கினர்கள். இது பகிரங்கமான விஷயம். "இலங்கையர் என்பவர் சிங்களவரே" என்றும், "இத்தீவு சிங்களவருக்கேசொந்த"மேன்றும் பொறுப்புள்ள மந்திரிகள் பேசவில்லையா? ஆகவே, தமிழர் துவேஷம் சில வருஷங்களாகவே, சிங்கள அரசியல்வாதிகளினல் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்தநிலைமையில் திரு பொன்னம்பலத்தின் பேச்சால் மட்டும் சமூக வெறிபிடித்திருப்பதாகக் கூறுவது உண்மைக்கு மாறாகுமேன்பதை அழுத்தமாக வற்புறுத்துகிறோம். சிறுபான்மையருக்குப் பொதுவாகவும், தமிழருக்குச் சிறப்பாகவும் தலைமைவகித்து அரசியல் போரைநடத்தும் திரு. பொன்னம்பலத்தை பெரும்பான்மையர் துச்சமாகப் பேசுவதும், இகழுவதும் ஆச்சரியமல்ல. அவரிடமுள்ள மனக்கசப்பைச் சமூகவெறுப்பாக மாற்றுவது பேடித்தனமேன்றேசொல்லுவோம்.

### பர்மா ஞாபகமிருக்கட்டும்

இப்போது எழுந்துள்ள பயங்கரமான துவேஷவெறியின் போக்கை உடன் நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதிலிருந்து, இரண்டொருவர் மலையாளிகளின் கடைமுன்புநின்று மறியலும்செய்தார்கள் எனச் சொல்லப்படுகிறது. அதற்கு அடுத்தபடி கைகலந்த கலகமாய்த்தானிருக்க முடியுமேன்பதை நாம்சொல்லத்தேவையில்லை. சாதாரணமான விளம்பரங்களில் வெளிவரும் தவறில்லாத வார்த்தைகள்கூட சமூகத்தின் ஒழுக்கத்திற்குப் பொருந்ாதவைகளேன்றுசொல்லி நமது பொலீசார் தடுப்பதை நாம் அறிவோம். அத்தகைய பொலீஸ் அதிகாரிகளுடைய கண்களுக்கு துவேஷம்நிறைந்த பிரசுரங்கள் தென்படவில்லையா? கலப்பில்லாத துவேஷம் பேசப்படும் பொதுக்கூட்டங்களுக்குப் பொலீசார்போவது கிடையாதா? பொலீஸ் இலாக்கா ஸர். ஜெயதிலகாவின் ஆதிக்கத்திலிருக்கின்றது. தேசத்தின் அமைதியையும், சமாதானத்தையும் முன்னிட்டேனும் துவேஷப் பிரசுரங்களையும், பிரசாரத்தையும் உடன் நிறுத்துவதற்கு ஸர். ஜெயதிலகா முயலவேண்டும். இந்தியரையும், இலங்கைத் தமிழரையும் பகிஷ்கரித்து ஒதுக்கவேண்டுமென்ற கூச்சல் கிளம்புவதற்குக் காரணம் என்ன? இத்தீவிற்கு சிங்களவரே சொந்தமானவர்; மற்றவர் அந்நியர்என்ற எண்ணம் பாமர மக்களின் மனத்திற் பிரவேசித்திருக்கின்றது. சிங்கள அரசியல் தலைவர்களுடைய முறையற்ற இராஜீயக்கோள்கைகள் இவ்வளவு அலங்கோலமான நிலைமைக்கு இலங்கையைக் கொண்டுவந்திருக்கிறது. காரியம் மிதமிஞ்சுவதற்கு முன்னல் மந்திரி சபையார் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தவறினல், எதிர்காலத்தில் நிகழக்கூடிய பிரமாதமான மோசங்களுக்கு அச்சபையாரே பொறுப்பாளிகளேன்று கருதப்படுவார்கள். "பர்மா ஞாபகமிருக்கட்டும்," என்று ஒரு மந்திரியார் சமீபத்தில் அரசாங்க சபையில்வைத்து ஞாபகப்படுத்தினரல்லவா?

---

## திரு. பொ. நாராயணர்

அவர்களுக்குக் கொடுக்கப்பெற்ற "மூகாந்திர"ப் பட்டத்தை விதந்து வியந்து இவர் இதய நண்பர் வயா, உரும்பராய், ஸ்ரீ க. வே. கூறிய

### ஓர் கிழக் கவி.

பதினான்குசீர்க் கழிநெடிலடி மன்விருத்தம்

ஆண்டகை யழகன் படக்கமா சார மடைந்தவர் குழாத்தினைப் புரத்தல்
அருள்பொறை யமல பத்திசத் தியவாக் காருயி ரிரக்கமத் தியக்கர் [தில்
பூண்டவோர் மெய்ப்ப முதிகனென் றகிலப் புமொலாங் கொடுக்கபட்டக்
புகழ்மதிப் புளதிம் "மூகாந்திரப்" பட்ட மென்பமோ அறிவுசால் பெரி
யோர்

நீண்டவப் பெரிய புகழினைத் தரித்த நிற்குப்பொன் னம்பலன் றவத்து
நேயபா லகநா ராயணு விதுபூ ரணமென்முன் மின்மினி யொளியே
வேண்டரு மதைவேண் டினையென விவணீ மேவிய வியப்பைமற் றவரார்
மேவினர் மேவி லவர்தம்பட் டத்தை யும்வியக் கலாம்வியப் பென்றே.

---

### கால நிலை

இன்று சிறுமழை பெய்தது. காற்றமைதி. மழைக்கோலமும், மந்தாரமுமிருப்பதால், வெயிலினுக்கிரம் குறைவு. ஆனித்தூக்கம் என்பதோடு, பஞ்சமும் தலைகாட்டுகின்றது. புகையிலை விற்பனவு கொள்வனவுகள் தாமதத்திலிருக்கின்றன.

---

## அரசாங்க சபை உரிமை மசோதா

### மன்னர் சம்மதத்திற்கு அனுப்பப்பட்டது

சென்ற 28-ந்திகதி அரசாங்கசபையில் நிறைவேற்றப்பட்ட "அரசாங்கசபை உரிமை மசோதா"வை மன்னர் பிரானின் சம்மதத்திற்கு அனுப்பிவைத்திருப்பதாகக் கவர்னர் 27-ந்திகதி நடந்த சபைக் கூட்டத்திற்கு ஒரு செய்தி யனுப்பியிருந்தார். வாலிப குற்றவாளிகளுக்கு ஒரு கோர்ட்டை நிறுவுவது, ஸிவில், கிரிமினல் சட்டங்களைத் திருத்துவது முதலியவை உட்பட வேறு சில மசோதாக்களையும் மன்னர் பிரானின் சம்மதத்தை யறிவதற்காக அனுப்பிவைத்திருப்பதாய்க் கவர்னர் அறிவித்திருக்கிறார்.

## புல்லுண்ணும்மனிதர்

லண்டனில் ஒரு விசேட பாரிஸ்டர் இருக்கிறார். அவர் புல்லைத்தின்றே உயிர் வாழ்கிறார்! இவர் ஜஸ்டிஸ் பிரான்ஸனின் சகோதரர் ஜே. ஆர். பிரான்ஸன். வாரம் மும்முறை புல்வளரும் தோட்டத்துக்குச் சென்று நல்ல பசுமையான புல்லை அறுத்துக் கொண்டு வருகிறார். வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்கிறார். அவருக்கு அறுபத்தேழு வயதாகிறது. இன்னும் நல்ல திடகாத்திரராகவே யிருக்கிறார்.

---

விருப்பருஞ் சுற்ற மியையி னருப்பரு, வாக்கம் பலவுந் தரும்.

# ஆங்கிலோ - ருஷ்ய சமரஸப் பேச்சில் தொல்லை

## ஹிட்லரின் மகிழ்ச்சி ஆக்ரமிப்புக்கு அறிகுறியல்லவா?

## திரு. சேம்பர்லேனுக்குக் கேள்வி 'குண்டுகள்'

## மாஸ்கோ அபிப்பிராயங்கள் பரிசீலனை

திரு. வில்லியம் ஸட்ராங் மாஸ்கோவுக்குச் சென்றபின்னர் பிரிட்டிஷ் ஸ்தானீகரும், பிரெஞ்சு ஸ்தானீகரும் சோவியத் பிரதமமந்திரி மான்ஷியர் மோலட்டோவிடம் ஆலோசனைகளைப்பற்றிச் சோவியத்சர்க்கார் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களை பிரிட்டிஷ் சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகப் பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு. நெவில்சேம்பர்லேன் 28-ந்உ காமன்ஸில் அறிக்கை செய்தார். திரு. சேம்பர்லேன் மேலும் கூறியதாவது:—

"அந்நியநாட்டு மந்திரி ஹாலிபாக்ஸ்பிரபு மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகருக்குக் கூடிய சீக்கிரம் புதிய சட்டளைகளை அனுப்பி வைக்கலாமென்று நம்புகிறார். மந்திரிகளில் ஒருவர் மாஸ்கோவுக்கு விஜயம் செய்வதால் பிரயோசன மேற்படமாட்டாது."

டாக்டர் டால்டன் பின்வருமாறு கேள்விகேட்டார்:— "ஆங்கிலோ-சோவியத் சமரசப் பேச்சுகளில் ஏற்பட்டிருக்கும் பெரிய முட்டுக்கட்டைகளும் சங்கடங்களும் பெர்லினில் மிகுந்த திருப்தியுண்டுபண்ணிக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரியவில்லையா? இதனால் ஜெர்மனி புதிய ஆக்கிரமிப்புச் செய்வதற்குச் சாதகமான நிலைமையும், ஐரோப்பிய மகாயுத்தத்திற்குக் காரணமும் ஏற்படுகின்றனவல்லவா?"

பிரதம மந்திரி பின்வருமாறு பதில் கூறினார்:— "அப்படியிருக்கலாம். ஆனால் அவ்விஷயம் சோவியத் சர்க்காருக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்று நம்புகிறேன்."

### பூமிதானத் திட்டமா?

ஆங்கிலோ-சோவியத் சமரசப் பேச்சுகள் மாஸ்கோவில் இன்னும் நடந்துகொண்டுதானிருக்கின்றன. சமீபத்தில் சமரசப்பேச்சுகள் முடிவதற்குரிய அறிகுறிகள் காணப்படவில்லை. இந்நிலைமையில் மேற்கூறிய சமரசப்பேச்சுகள் முறிந்துவிடக் கூடுமென்று திரு. சேம்பர்லேன் எதிர்பார்ப்பதாகவும், யுத்த வெறியர்களை மீண்டும் திருப்தி செய்யும்பொருட்டு குடியேற்ற நாடுகளின் விநியோகத்தை மாற்றியமைப்பது சம்பந்தமாக அவர் ஓர் திட்டம் தயாரித்துக்கொண்டிருப்பதாகவும் இன்டர்நேஷனல் நியூஸ் ஏஜன்ஸி செய்தியொன்று கூறுகிறது.

### ஆங்கிலோ-சோவியத் உறவு கண்டனம்

ஆங்கிலோ-சோவியத் ஒப்பந்தத்தை அகிலஉலகக் கத்தோலிக்கர்கள் யாவரும் மிகவும் பலமாக எதிர்க்கிறார்கள். அந்நியநாட்டு மந்திரி காரியாலயத்தைச்சேர்ந்த உத்தியோக வட்டாரங்களிலும் கூட இதே அபிப்பிராயம்தான் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மன் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு பிரிட்டன் போலந்தை மாத்திரம் நம்பினால் போதுமென்று மேற்கூறிய உத்தியோக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

### பாப்பாண்டவரின் திட்டம்

சோவியத் ருஷ்யாவைச் சேர்க்காமல் ஓர் சமரச ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே பாப்பாண்டவர் ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் தலையிட்டதாகக் கூறப்படுகிறது பாப்பாண்டவர் ஐரோப்பிய அரசியல் விஷயங்களில் தலையிட்டபின்னர் ஆங்கிலோ-சோவியத் நட்புக்கு எதிர்ப்பு ஏற்படத் துவங்கியது.

மாஸ்கோவில் நடைபெறும் ஆங்கிலோ-சோவியத் சம்பாஷணைகளைப்பற்றிச் "சீனு டைம்ஸ்" பத்திரிகையில் ஓர் ஸ்வாரஸ்யமான கட்டுரை பிரசுரமாயிருக்கிறது. கட்டுரையின் சாராம்சம் வருமாறு:—

"ஆங்கிலோ-பிரெஞ்சு சோவியத் ஒப்பந்தத்தில் தூரதிசைக்கிழக்கையும் சேர்க்க வேண்டுமென்று சோவியத் சர்க்கார் வற்புறுத்துவதாகப் பெர்லினிலிருந்து கிடைத்திருக்கும் ஓர் செய்தி கூறுகிறது. சோவியத் பிரதம மந்திரி மான்ஷியர் மோலட்டோவும், பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. வில்லியம் ஸ்ட்ராங்கும் சமரசப்பேச்சுகள் வெற்றியளிக்குமென்று நம்புகிறார்கள்.

### ருஷயாவுக்குப் பலமில்லையா?

ஆங்கிலோ-சோவியத் ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் மந்திரிகளிற் பலர் பலமாக எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது. சோவியத் ருஷ்யா வெளியுலகத்திற்கு விளம்பரம் செய்துகொண்டிருக்கும் அளவிற்குப் பலமுள்ளதாயிருக்காதென்று கருதுவதால் சில மந்திரிகள் ஆங்கிலோ ருஷ்ய ஒப்பந்தத்தை ஆக்ஷேபிக்கக்கூடும். ருஷ்ய ராணுவத்தில் பூரணமாகப் பயிற்சிபெற்ற வீரர்களும் அதிகாரிகளும் மிகவும் குறைவாய் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆங்கிலோ-சோவியத் ஒப்பந்தத்தை ஆதரிப்பவர்கள் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களைப்போல் சோவியத் பலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். மேற்கே ஜெர்மன் ஆக்கிரமிப்பையும், கிழக்கே ஜப்பானின் ஆக்கிரமிப்பையும் எதிர்க்க முடியுமென்று அவர்கள் நம்புகின்றார்கள் இத்தகைய அபிப்பிராயமுள்ளவர்களில் திரு. ஈடனும் ஒருவர். எனினும் திரு. ஈடனை மாஸ்கோவுக்கு அனுப்பத் திரு. சேம்பர்லேன் பயப்படுகிறார். திரு. ஈடனை மாஸ்கோவுக்கு அனுப்புவதால் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் பொல்லாதகோபம் ஏற்படுமென்று திரு. சேம்பர்லேன் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. மேலும் திரு. ஈடன் மாஸ்கோவிலிருந்து ஓர் ஒப்பந்தத்துடன் லண்டனுக்குத் திரும்ப நேரிட்டால் அவரை மந்திரிசபையில் சேர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

### பிரிட்டனின் நேசநாடுகள்

பிரிட்டனின் நேச நாடுகளுடைய நிலைமையும் ருஷ்யாவுக்குப் பாதகமாயிருக்கிறது. அவை ஆங்கிலோ--சோவியத் ஒப்பந்தத்தை விரும்பவில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. போலந்துக்கு ருஷ்யாமீது சிறிதுகூட விரும்பம் கிடையாது. ருமேனியா ஏறக்குறைய ஓர் பாஸிஸ்டுநாடு. ஸ்டாலின் பால்கன்நாடுகளைக் காப்பாற்ற உறுதிகொண்டிருப்பதாகக் கர்ச்சிக்கிறார். ஆனால் அந்தப் பால்கன்நாடுகள்கூட சோவியத் ருஷ்யாவின் நட்பை விரும்பவில்லை.

### சோவியத் சந்தேகம்

சோவியத் சர்க்காருக்கு, திரு. சேம்பர்லேன்மீது இன்னும் பலமாகச் சந்தேகம் இருக்கிறது. கடைத் தேங்காயைப்பிடுங்கிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல் வேறு எந்த நாட்டின் பூமியையாவது திரு. சேம்பர்லேன் சர்வாதிகாரிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்ய எண்ணியிருப்பதாகவே சோவியத் சர்வாதிகாரி மான்ஷியர் ஸ்டாலின் கருதுவதாகக் கூறப்படுகிறது.

### விவாகம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை விமன்கமம் உடையார் திரு. அருணசலம் அவர்களின் இரண்டாவது புத்திரரும், கொழும்பு அரசினர் ஆபீசில் உத்தியோகமாகவிருப்பவருமான, திருவளர்செல்வன் இராசநாயகம் அவர்களுக்கும், வயாவிளான் திரு. காசிநாத உடையார்அவர்களின் புத்திரரும் மலாய்நாட்டில் P. W. D. இஞ்சினியராகவிருந்து விளங்கியவருமான திரு. இராமலிங்கம் அவர்களின் கனிஷ்டபுத்திரி திருவளர் செல்வி சொர்ணம்மாளுக்கும், இந்த ஆனிமீ கஉ-ந் திகதி (26-6-39) திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே, அனேக சுற்றமித்திரர் உத்தியோகத்தர் சமுகத்திலே திருமங்கல்ய தாரணக்கொண்டாட்டம் சிறப்புற நடந்தேறிற்று. தம்பதிகள் சகல பாக்கியங்களும்பெற்றுப் பல்லாண்டுவாழச் சிவபிரான் திருவருள்புரிவாராக. சுபம்.

### ராணி ரூபாய்

1. மாட்சிமைதங்கிய மாஜி விக்டோரியா ராணி அல்லது சக்கரவர்த்தினி அவர்களின் உருவமுள்ள ரூபாய்களையும், அரை ரூபாய்களையும் புதுக்கோட்டை சமஸ்தான கஜானு உத்தியோகஸ்தர்கள் வாங்கிக்கொண்டு அவைகளுக்குப்பதிலாய் சமீபகாலத்தில் அடிக்கப்பட்ட நாணயங்களைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்களென்பதாய் அறிக்கை பேப்பர்களில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

2. புதுக்கோட்டையிலோ அல்லது சமஸ்தானத்தில் வேறு இடங்களிலோ உள்ள கஜானு உத்தியோகஸ்தர்கள் உண்மையான விக்டோரியா நாணயங்களை வாங்கிக்கொள்ள மறுக்கிறார்கள் என்கிற விஷயத்திற்கு ஆதாரம் கொஞ்சமேனும் இல்லை. சமீபத்தில் கஜானுக்களில் ரூ 7,000 வரை இந்த நாணயங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. கள்ள நாணயமென்று சந்தேகப்படக்கூடிய நாணயங்களை வாங்க அவர்கள் மறுக்கிறார்கள். கள்ள நாணயமென்று தெளிவாய் தெரிந்தவைகளை வெட்டிக்கொண்டு வந்தவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். கள்ள நாணயங்களைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை சீர்திருத்துவதற்கான வழிகளை ஸ்ரீ தர்பார் அவர்கள் ஆலோசித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

## கோபம் பாவம் அறியாது!

### புருஷனின் சித்திரவதை

### மனைவியின் கோர மரணம்

சென்ற 16-ந்திகதி விருதுநகர் சாத்தூர் தாலுகாவைச்சேர்ந்த வேப்பிலைப்பட்டிச் சத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள நடுவிற் பட்டியில் சுப்பையாபிள்ளை என்பவர் தன் மனைவியின் துர்நடத்தையைக் கண்டு மனம் சகிக்காமல் உயிருடன் சித்திரவதை செய்ததால், அவள் உயிர்துறந்து விட்டாளாம். உடனே அவளைப் பக்கத்திலுள்ள பருத்திமார் படைப்பில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்து விட்டாராம். இச்சம்பவம் பொலிஸ் உதவிச் சூப்ரண்ட் ராவ்சாகிப் அப்பாத்துரைப்பிள்ளைக்குக் கிடைக்கவே ஸ்தலத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார். எதிரியை நேற்றுச் சாத்தூரில் பொலீசார் கைது செய்திருக்கிறார்கள்.

## எல்லாம் அதிசயம்

### நிர்வாணக் கலியாணம்

சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு நிர்வாணக் கலியாணம் நடந்தது. மணமக்கள் முற்றிலும் பிறந்த கோலத்தில் இருந்தார்கள். அதே சமீபத்தில் ஷெப்பீல்டில் சீதோஷ்ணநிலை 84 டிகிரியேயிருந்தபொழுது ஒரு மாது சட்டை, ரவிக்கை, தொப்பி, பாதரட்சை, எல்லாம் சேர்த்து இருபத்துநாலு சாமான்கள் உடம்பில் அணிந்திருந்தாளாம். ஒரு கழுதைப்பாரம்!

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக், கோடின்றி நீர்நிறைந் தற்று.

## உபநயனக் கொண்டாட்டம்

தன்னுலையம்பதி வாசரான பிரமஸ்ரீ. ஆ. சபாரத்தினக் குருக்கள்அவர்களின்புத்திரன் திரு. இராமச்சந்திர சர்மாவுக்கு இந்த ஆனி மாசம் ரு-ந் திகதி திங்கட்கிழமைச் சுபமுகூர்த்தத்திலே, அனேக சுற்ற மித்திரர் சமூகத்திலே, உபநயன பிரமோபதேசக்கிரியைகளும், அடுத்த மூன்று தினங்களிலும், சமிதா தானுதிக் கிரியைகளும், தெண்டு கட்டுதல், ஊர்வலம்முதலிய கொண்டாட்டங்களும் சிறப்புற நடந்தேறிற்று.

## 46 ருஷிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

மஞ்சுக்கோ எல்லைப் பிரதேசத்தில் ஜப்பானிய விமானங்களுக்கும் ருஷிய விமானங்களுக்குமிடையில் தகராறுகள் ஏற்பட்டனவெனவும், அசனுல் 49 ருஷிய விமானங்கள் ஜப்பானியரால் சுட்டு வீழ்த்தப்பட்டனவெனவும் மஞ்சுக்கோவின் தலைநகரான ஸிங்கிங் என்னுமிடத்திலுள்ள ஜப்பானிய இராணுவ அறிக்கையொன்று வெளிவந்துளது.

இவ்வறிக்கையின்படி ருஷியாவிற்குச் சேர்மதியான 150 விமானங்கள் மஞ்சுக்கோ எல்லைப் பிரதேசத்லைத் தாண்டி லேக் பியூர் நோர் என்னுமிடத்தை யணுகியதும், 8 ஜப்பானிய விமானங்கள் அவர்களின் வருகையை ஆட்சேபித்து 49 விமானங்களைச் சுட்டு வீழ்த்தினவாம். இத் தகராற்றில் 5 ஜப்பானிய விமானங்களும் சேதமடைந்தனவாம்.

இம்மாதிரியாக மீண்டும் சோவியத் போர் விமானங்கள் எல்லையைத் தாண்டி வருமாயின், தாம் கடுமையான நடவடிக்கைகளைக் கையாளுவதாக எச்சரிக்கை செய்து ஓர் செய்தியை, ஸிங்கிங்கிலுள்ள தலைமை ராணுவாதிகாரிகள் விடுத்துள்ளனராம்.

## அக்ருவில் பூகம்பம்

ஆபிரிக்காவிலுள்ள அக்ரு என்னுமிடத்தில் ஓர் பலத்த பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டதாகவும், அதிர்ச்சி ஓர் இரவு முழுவதுமே ஏற்பட்டிருந்தமையால் அதிக சேதங்கள் உண்டாயிற்றெனவும் கோல்ட் கோஸ்ற் தேசாதிபதியவர்கள் ஓர் தந்திச் செய்தி லண்டனுக்கு அனுப்பியிருந்தனராம். அனேக கட்டடங்கள் தரைமட்டமாக்கப் பட்டனவெனவும், 11 பேர் மாண்டனரெனவும், 50 பேர் படுகாயமுற்றனரெனவும் கூறப்படுகிறது.

## கென்ற் கோமகனும் கோமகளும்

### நவம்பர் 5-ல் கொழும்பு சேர்வார்

அவுஸ்திரேலியாவுக்குப் பிரதம இராசப்பிரதிநிதியாக நியமனம்பெற்றுச் செல்லும் கென்ற் கோமகனும், கோமகளும் வரும் நவம்பர் மாதம் 5-ந் திகதியளவில் கொழும்பிற்கு வந்து சேர்வார்களாம். இவர் இப்பொழுது அவுஸ்திரேலியாவிலிருக்கும் பிரதம இராஜப்பிரதிநிதியான கௌரிபிரபு அவர்களிடமிருந்து பதவி யேற்பாராம்.

## 5000 ரூபா திருட்டு

### விதவையின் துரதிர்ஷ்டம்

சென்ற 23-ந் திகதி மட்டக்களப்பிலிருந்து 19 மைல் தூரத்திலுள்ள துறை நிலவளை என்னுமிடத்தில் வசித்துவந்த வேலாத்தை என்னும் விதவையின் வீட்டின் சுவரிற் கன்னமிட்டுக் கள்வர் 5000 ரூபாய் பெறுமதியான தங்கம், வெள்ளி நகைகள் ரொக்கம் முதலானவற்றைத் திருடிக் கொண்டுபோய் விட்டனர். குறித்த பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறையின் சாவி இவள் வசமே இருந்ததாம்.

## கஞ்சா வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை

### சாட்சியத்தில் முரண்பாடுகள்

வல்வெட்டித்துறையைச்சேர்ந்த சோமசுந்தரப்-சுந்தரலிங்கம், சிவசுந்தரம்-நடராஜா ஆகிய இருவர்மீதும் கடந்த ஜனவரி 29-ந்திகதியன்று யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேஷனில் லைசன்சில்லாமல் 26 ரூத்தல் கஞ்சாவும் ரூ. 5950 விலைமதிப்புள்ள 5 ரூத்தல் அபினும் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவோர் வழக்கு 28-ந்திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

பிராஸிக்கியூஷன்தரப்பில் பின்வருமாறு கூறப்பட்டது.

எதிரிகள் இருவரும் யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ஓர் டிரங்குப்பெட்டியை வெள்ளவத்தையில் ஒருவருக்கு அனுப்புவதற்காக ரயில்வே அதிகாரிகளிடம் கொடுத்தனர். எதிரிகள் நடந்துகொண்ட மாதிரியைக் கவனித்திருந்த கலால் கார்டு ஒருவர் கலால் இன்ஸ்பெக்டருக்கு தகவல் கொடுத்தார். கலாலஇன்ஸ்பெக்டர் எதிரிகளை பிணையில் விடுத்து டிரங்குப்பெட்டியை ஸீல்வைத்தார். ஓர் கலால் அதிகாரியையும் அவர் பெட்டியுடன் வெள்ளவத்தைக்கு அனுப்பி அதைப் பெற்றுக்கொள்ள வருபவரைக் கண்டுபிடிக்கும்படி கூறினர். ஆனல் வெள்ளவத்தை ஸ்டேஷனில் பெட்டியின் சொந்தக்காரர் எவரும் வரவில்லை எனவே ஸ்டேஷன் அதிகாரிகள் முன்னிலையில் கலால் இன்ஸ்பெக்டர் பெட்டியைத்திறக்கச்செய்து பார்க்கையில் அதில் 26 ரூத்தல்கஞ்சாவும் 5 ரூத்தல் அபினும் காணப்பட்டன.

பிராஸிக்கியூஷன்தரப்பில், ரயில்வே கூலி ஒருவர் மாத்திரமே சம்பவத்தை நேரில்கண்டதாக சாட்சியங்கூறினர். ஆனல் கோர்ட்டில் எதிரிகளை அடையாளங்கண்டுகூறச் சொன்னபொழுது இந்தச் சாட்சி எதிரிகள்தான் யாழ்ப்பாணம் ஸ்டேஷனுக்கு அப்பெட்டியைக் கொண்டுவந்தனரென்று திட்டமாகக் கூற முடியவில்லையென்று தெரிவித்தார்.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையில், சாட்சியங்களின் முரண்பாடு காரணப்படுவதால் எதிரிகளைக் குற்றவாளிகளென்று கூற முடியாதென்று குறிப்பிட்டார்.

# சீனக்கடலில் ஜப்பானியரின் பலாத்கார நடவடிக்கை

## அடக்குவதற்கு அமெரிக்க கடற்படை

## அனுப்புவதுபற்றி ஆலோசனையா?

சீனக் கடல் பிராந்தியங்களில் ஜப்பானியர்களின் பலாத்கார நடவடிக்கைகளை அடக்குவதற்காக ஐக்கிய அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த யுத்தக்கப்பல்களை அனுப்புவதுபற்றி வாஷிங்டனில் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக "வாஷிங்டன் ஸ்டார்" பத்திரிகையில் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். தூரகிழக்குக் கடல்களில் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிக்கும் சக்தி அமெரிக்காவுக்குத்தான் இருப்பதாகவும், அமெரிக்கக் கொடிதான் தூர கிழக்கில் ஜனநாயக உரிமைகளின் அறிகுறியாக இருக்கிறதென்றும், ஆங்கிலோ--பிரஞ்சு கடறபடை ஐக்கியமும் இதையே குறிக்கிறதென்றும் அவர் பிரஸ்தாப பத்திரிகையில் எழுதியிருக்கிறார். 1907-ம் வருடத்தில் தியோட்டர் ரூஸ்வெல்ட், அமெரிக்க யுத்தக் கப்பல்களை உலகத்தைச் சுற்றியனுப்பியதுபோல், இப்பொழுது மீண்டும் அதேபோன்று யுத்தக் கப்பல்களை அனுப்புவதோடு ஜப்பான்மீது விசேஷ கண்ணோட்டம் செலுத்த வேண்டுமென்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

மேற்படி யோசனைகள்பற்றி அதிகார வட்டாரங்களில் அபிப்பிராயம் எதுவும் கூறப்படவில்லை. ஆனல் இதற்குமுன்பு சீனக் கடல் பகுதியில் நெருக்கடி ஏற்பட்டபொழுது ஹவாய்க்கும், மணிலாவுக்கும் கடற்படைகளை அனுப்புவதுபற்றி அமெரிக்க கடற்படை வட்டாரங்களில் ஆலோசனை செய்யப்பட்டது.

இப்பொழுது அமெரிக்க சர்க்கார் தங்களது நடுநிலைமைக் கொள்கை சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்தியமைப்பதைப் பற்றியே முக்கிய கவனஞ் செலுத்திவருவதாக விஷயந்தெரிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பத்திரிகைக்காரர்கள் மகாநாடு ஒன்றில், ஐக்கிய அமெரிக்க அரசாங்கமந்திரி திரு. கார்டல் ஹல்லிடம், தூரகிழக்கில் சர்க்கார் பரந்த கொள்கையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்களாவென்று கேட்டபொழுது இவ்விஷயம்பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென்று கூறிவிட்டார்.

ஸ்வாட்டோ நிலைமை சமாதானமடைந்துவிட்டதால் ஐக்கிய அமெரிக்க யுத்தக்கப்பல்கள் அங்கிருந்து திரும்பிவிட்டன.

ஷாங்கையிலிருந்து கீழ்க்கண்ட செய்தி கிடைத்திருக்கிறது:—

பூச்சவ், வெஞ்சோ ஆகிய இரு இடங்களிலிருந்தும் அந்நிய தேசத்தவர்களும் அந்நிய கப்பல்களும் வெளியேற்றப்பட வேண்டுமென்று ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்திருந்த வேண்டுகோளைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் நிராகரித்துவிட்டனர். பிரஸ்தாப இரு துறைமுகங்களும் சர்வதேச துறைமுகங்களென்றும் எனவே தடையின்றி அவைகளை உபயோகித்துக் கொள்ளப் பிரிட்டிஷ்காரர்களுக்குச் சர்வ உரிமையும் உண்டென்றும் பதிலளிக்கப்பட்டுவிட்டது. அதோடு இவ்விரு துறைமுகங்களில் பிரிட்டிஷ்காரருக்கு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படும் பட்சத்தில் ஜப்பானியர்கள் தான் அதற்குப் பொறுப்பாளியென்றும் அறிவித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## யாழ்ப்பாணத் துறைமுகங்கள்

பிற நாடுகளிலிருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்படும் நெல்லை யாழ்ப்பாணத்துறைமுகங்களில் இறக்குமதிசெய்யவொட்டாது தடுப்பதற்கு அரசினர் தீர்மானித்திருக்கின்றனரென ஓர் வதந்தி யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் உலாவுகின்றதெனவும், இதைப்பற்றிச் சுகாதார மந்திரியாரைத் தாம் விசாரித்தபோது, இப்படியான நடவடிக்கையைத் தம்மையறியாது ஒருவரும் எடுக்கமாட்டாரெனவும், இதுவிஷயமாக ஒருவிதமுடிவுஞ் செய்யப்படவில்லையெனவும், அப்படியானநடவடிக்கைக்குத் தாம் மாறாகவிருப்பதாகவும், அதுவுமன்றி இது மந்திரிசபையாரால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தன்றெனவும் மந்திரியார் கூறியதாகவும், அரசாங்கசபையின் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அ. மகாதேவா அவர்கள் பத்திரிகைகட்கு ஒருநிருபம் விடுத்திருக்கின்றார்.

## சீமெந்து தொழிற்சாலை

இலங்கையில், விரைவில் ஓர் இந்திய சமுதாயம் சீமெந்து உற்பத்தி செய்வதற்காக ஒரு தொழிற்சாலையை நிறுவுமெனத் தெரிகிறது. புத்தளம் டிஸ்திறிக் பெருந்தொகையான சீமெந்து உற்பத்திசெய்வதற்கு வேண்டிய இயற்கை வளங்களையுடையது என்று உதவி டிரெக்டர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆரம்பத்திற் சீமெந்து உற்பத்தி செய்வதற்கானபொருள்கள் யாழ்ப்பாணத்திலேயே அந்த ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டுமென ஆலோசிக்கப்பட்டது. புத்தளத்திற் தொழிற்சாலை நிறுவப்படின் போக்குவரத்துச்செலவு சிறிது குறையுமெனக் கூறப்படுகிறது.

# மாணிக்கவாசகசுவாமிகள் சிவதீக்ஷைபெற்றமை

மாணிக்கவாசக சுவாமிகள் சைவ சமயகுரவர் நால்வருளொருவராவர். இவருடைய பிள்ளைத்திருநாமம் திருவாதவூரர். மாணிக்க வாசகரென்பது இவருடைய தீக்ஷாநாமம்.

"பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினன் முறைதொடுத் தலங்க
லமுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசகனென்றார்."

— பரஞ்சோதி முனிவர்.

இக்கட்டுரையின்கண் இவர் சிவதீக்ஷைபெற்றமையைக் கடவுண்மாமுனிவர் அருளிச்செய்த பக்திநூலாகிய திருவாதவூரடிகள் புராணத்தை ஆதாரமாகக்கொண்டு விளக்குவாம்.

தீக்ஷையென்பது பரிசுத்தப்படுத்துங்கிரியை. அது 'தீக்ஷ' என்னும் வடமொழித் தாதுவினின்றும் பிறந்தது. அஞ்ஞானத்தைப்போக்கி ஞானத்தை அடையச்செய்யுங் கிரியையெனினும் பொருந்தும். இக்கிரியையைச் செய்பவரே குருவெனப்படுவர். ஆகவே, குருவெனப்படுபவர் சீடனிடத்துள்ள மலத்தைப்போக்கி அவனுக்குச் சிவஞானத்தைக் கொடுப்பவராவர்.

திருவாதவூரடிகள் பாண்டியனுடைய மந்திரியாயிருக்குங் காலத்திற் சோழநாட்டுக் கரையிலே குதிரைகள் கப்பல் மார்க்கமாக வந்திறங்கப் பெற்றனவென்று சிலர் அரசனுக்குச் சொன்னார்கள். அரசனுக்குக் குதிரைகள் தேவையாயிருந்தன. அப்பொழுது அரசன் தேவையான திரவியத்தை எடுத்துக்கொண்டு குதிரைகள் விலைக்கு வாங்கிவரும் வண்ணம் மந்திரியாரை ஏவினான். திருவாதவூரருடைய பக்திநிலையையும் அதிதீவிர பக்குவத்தையுஞ் சிவபெருமானறிந்து தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது சிவகணநாதர்களை மானுடவடிவங் கொள்ளப் பணித்து அவர்களைச் சீடர்களாகக் கொண்டு தாம் அருட்டன்மை வாய்ந்த ஆசிரிய வடிவந்தாங்கித் திருப்பெருந்துறையின்கண் ஓர் அழகிய குருந்தமரத்தின் கீழ்ச் சீடர்களுடன் அமர்ந்து திருவாதவூரடிகளுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். காட்டிலுள்ள மானை வேடன் பிறிதொருமானின் உதவியைக்கொண்டு பிடிப்பதுபோல இங்கு சிவபெருமான் சத்திநிபாத நிலையெய்திய ஒருவரைச் சிவமாந்தன்மையடையச் செய்வதற்குத் திருவுள்ளங்கொண்டு மானுடவடிவந்தாங்கி ஆட்கொள்வான் எழுந்தருளி வந்தார். இச்செய்கை இறைவனின் பெருங் கருணையினால் விளைந்ததன்றோ!

திருவாதவூரடிகள் குருந்தமரத்தின் கீழிருந்த ஞானாசாரியரைக் கிட்டிச்சேர்ந்தார். கண்ட மாத்திரத்தில் அவருக்கு அளவில்லாத ஆனந்தமுண்டாயிற்று. அவர் பக்குவமுடையவராயிருந்தபடியால் தமக்கு முன்னிருப்பவர் ஒரு விசேடமுள்ள ஞானியென்பது அவர் மனத்திலே பட்டது. தாம் மந்திரியாராயிருந்தபடியால் அவரைக் காயத்தால் வணங்காமல் மனத்தால் வணங்கினார். ஆசாரியருடைய கையிலே 'சிவஞானபோதம்' என்னும் நூலிருந்தது. மந்திரியார் அது என்ன நூலென்று வினவினார். ஆசாரியர் அது 'பொய்மையிலாச் சிவஞானபோதம்' என்றார். சிவமென்றாலென்ன, ஞானமென்றாலென்ன போதமென்றாலென்னவென்று பொருள் சொன்னால் தாம் அவருக்கு அடிமையாகுவதாக, மந்திரியார் சொன்னார். ஆசாரியார் சிவமென்பது ஒன்று, அதனை அறிதல் ஞானம், பின் அதனைத் தெளிதல் போதம் எனக் கூறினார். உடனே திருவாதவூரடிகள் கண்களினின்றும் நீர்வாரக் கலங்கி நின்று நிலையில்லாத செல்வமொன்றும் வேண்டாமென்றும் தமது பிறவித் துன்பத்தை நீக்கும் பொருட்டு அவருக்குத் தாம் அடிமையாகுவதாகவுங் கூறினார். இக்கூற்றை அங்கிருந்த திருத்தொண்டர்களுட் சிறந்த ஒருவர் கேட்டவுடனே ஆசாரியரை வணங்கிச் "சுவாமீ! இவர் அதி தீவிரதர பக்குவமுடையவர். இவருடைய வினைகளை நீக்கி ஆட்கொள்ள வேண்டும்" என்று இறைஞ்சினார் ஆசாரியர் நீ பயப்பட வேண்டாம். நீ முன்செய்த தவத்தின் பயனாக உன்னை ஆட்கொள்ள இங்கு வந்திருக்கின்றேம் என்று திருவாதவூரடிகளுக்குத் தேறுதல் சொன்னார்.

ஞானாசாரியர் தீட்சாமண்டபம் ஒன்று அமைக்கும்படி கட்டளையிட்டார். உடனே அழகான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. அதன்கண்ணே ஆசாரியர் அமருவதற்கு ஓர் ஆசனம் வைக்கப்பட்டது. பசித்துவருகிற ஒருவனுக்குத் தீயநாள் நல்லநாள் பாராமல் எப்படிப் பசியாற்றவேண்டுமோ அவ்வண்ணம் ஞானவேட்கையுடைய திருவாதவூரடிகளுக்குச் சுபநாள் பாராமல் தீக்ஷை செய்யலாமென்று ஞானாசாரியார் திருவாய்மலர்ந்தார். ஆசாரியர் ஆசனத்திலமர்ந்த பின்னர்த் திருவாதவூரடிகள் அவரைத் திருவமுது செய்வித்துப் புட்பம் தீபம் தூபம் முதலியன கொண்டு அர்ச்சித்தார்.

பின்பு ஞானாசாரியர் திருவாதவூரடிகளுக்குச் சட்சுதீக்ஷை செய்தருளினார். அது பார்வையினாற் செய்யப்படுவது. எவ்வாறு மாந்திரிகன் பாம்பினாற் கடிக்கப்பட்டவனைக் கருடபாவனையிலே பார்த்து விஷத்தைத் தீர்க்கின்றானோ அவ்வாறே ஆசாரியர் இங்கே திருவாதவூரடிகளுக்குப் பார்வையினாற் பாவவிமோசனஞ் செய்தார். விளக்கின்முன் னிருள் எவ்வாறு நீங்குமோ அவ்வாறு ஞானாசாரியருடைய பார்வையினாலே சீடனுடைய பாசமொழிந்தது.

இரண்டாவதாக ஆசாரியர் மந்திர தீக்ஷை செய்தார். அவருக்கு உபதேசஞ் செய்யப்பட்ட மந்திரம் திருவைந்தெழுத்தாகும். இதனாலே அம்மந்திரத்தின் மகிமை நன்கு விளங்குகின்றது. சைவநூல்களெல்லாவற்றிலும் அதன் சிறப்பைக்கூறும் பாகங்களைப் பரக்கக் காணலாம்.

மூன்றாவதாகத் திருவாதவூரடிகளுக்குத் திருவடிதீக்ஷை செய்யப்பட்டது. குருவினுடைய பாதங்களைச் சீடனுடைய சிரசின்மீது வைத்துச் செய்யும் தீக்ஷையாகும். சிவனுடைய திருவடி ஞானவடிவானது. அத் திருவடியை அடைந்தவர்க்கே ஞானமும் முத்தியுங் கிடைக்குமென்பது சைவநூற்றுணிபு. தாமிராதி லோகங்கள் பரிசன வேதியினாலே பரிசிக்கப்படுங்கால் எப்படிப் பொன்னாகின்றனவோ அப்படியே சற்குருவினுடைய திருவடி தீக்ஷையினாலே சீடன் தனது பாசத்திரயம் நீங்கப்பெற்றுச் சிவமாந்தன்மை யடைகின்றான்.

நான்காவதாக, ஆசாரியர் திருவாதவூரடிகளுக்குச் சாத்திரதீக்ஷைசெய்தார். அது சைவாகமாதி சிவசாத்திரங்களினுண்மைகளைச் சீடனுக்குப் போதித்தலாம். பதியின்லக்ஷணமும் பசுவின் லக்ஷணமும் பாசத்தின் லக்ஷணமும் பதியைப் பசு அடைவதற்குப் பாசந் தடையாயிருக்கிறதென்றும், அத்தடையை வெட்டுவதற்கு நான்குவழிகள் உண்டென்றும் ஆசாரியர் திருவாய்மலர்ந்தார். அந்நான்கு பாதங்கள் சரியை கிரியை யோகம் ஞான மென்பன. சி—ன்.

# இந்தியத் தொழிலாளர்களின் இறுதி எச்சரிக்கை

## "அனைவரும் ராஜிநாமாச் செய்வோம்"

## உப்பளத் தொழிலாளர்கள் அனுப்பியிருக்கும் கடிதம்

## "சிங்களவர்கள் செய்யவியலாத வேலை"

தினச் சம்பளத்திற்கு வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களையெல்லாம் நாடு கடத்துவதென்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்துவிட்டபொழுதிலும் யானைபிறவு, பளளி ஆகிய இரு உப்பளங்களிலும் தினச் சம்பளத்திற்கு வேலை செய்கின்ற இந்தியர்களை விதிவிலக்காகக் கருத நேரிடுமென்று தோன்றுகிறது. இவ்விரண்டு உப்பளங்களிலும் சுமார் 200 இந்தியத் தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள். தங்களில் எவராவது ஒருவருக்கு இலங்கையைவிட்டுப் போகும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டால் ஜுலை 15-ம் தேதியன்று எல்லோரும் வேலைகளை ராஜீநாமாசெய்து விடுவோமென்று பயமுறுத்தி அவர்கள் உப்பு இலாக்கா அதிகாரிக்கு ஒரு எச்சரிக்கைக் கடிதமனுப்பியிருப்பதாய் அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக ஹட்டன் தொகுதியின் அரசாங்கசபைப் பிரதிநிதியாகிய ஸ்ரீ கோ. நடேசய்யர் பிரதமக் காரியதரிசிக்கு ஒரு மகஜர் அனுப்பியிருப்பதாயும் அதைப் பற்றி அதிகாரிகள் இப்பொழுது ஆலோசனை செய்துகொண்டிருப்பதாயும் தெரியவருகிறது. உப்பளங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்கள் அந்த வேலைக்காகப் பிரத்தியேகமாய்ப் பயிற்சியளிக்கப் பட்டவர்களாகையாலும், அவர்கள் நீக்கப்பட்டு விட்டால் இத்தொழில் சீர்குலைந்து விடுமாதலாலும் இவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்படமாட்டாதென்று கருதப்படுகிறது.

### இலங்கையர்களால் செய்ய முடியாத வேலை

உப்பு இலாக்காவைச் சேர்ந்த ஒரு அதிகாரி 28-ந்திகதி காலை பத்திரிகா நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:—

உப்பளங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர்களை வேலைகளிலிருந்து நீக்குவது பெருந் தவறாக முடியுமென்பதில் சந்தேகமில்லை.

இந்த வேலையில் இலங்கையர்களை நியமிக்க முடியாது. உண்மையில், இலங்கையர்களை ஒரு சமயம் வேலைக்கு அமர்த்திப் பார்க்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது.

உப்பளங்களிலுள்ள தொழிலாளர்கள் காலை 7 மணிமுதல் 11 மணி வரையிலும் பிறகு 1 மணி முதல் 5 மணி வரையிலும் கடுமையான சூரிய வெப்பத்தில் தினசரி வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. காயும் வெய்யிலெல்லாம் அவர்களுடைய தலையில்தான். இது சிங்களவர்களுக்குச் சகிக்கமுடியாத நிலைமையாயிருக்கும். சிங்களவர்களை வேலைக்கு அமர்த்திப்பார்ப்பதன் முன்னால் இந்தியத் தொழிலாளர்களுக்குத் தினசரி 65 சதம் சம்பளம் கொடுக்கப்பட்டது. சிங்களவர்களையும் அமர்த்திக்கொள்ள வாரம்பித்த பிறகு சம்பளம் 85 சதமாக உயர்த்தப்பட்டது. இதைத் தவிர 120,000 அந்தருக்குமேல் உற்பத்தியாக்கப்படும் ஒவ்வொரு அந்தருக்கும் 5 சதம் வீதம் போனஸ் வேறு அளிக்கப்படும்.

### இந்தியர்கள் நீக்கப்பட்டால்

உப்பளங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் வேலைகளிலிருந்து நீக்கப்பட்டால் உற்பத்தியாகும் உப்பு மட்டரகமாகிவிடலாமென்பதோடு சர்க்காரின் உப்பு இலாக்கா வருமானமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடலாம்.

யானையிறவு உப்பளங்களில் வேலை செய்ய இருபத்தைந்து இந்தியத் தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வருவதற்குச் சென்ற வருடம் மே மாதம் ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா விரும்பியதும், இதற்காக லைசென்ஸ் வழங்கவேண்டுமெனக் கோரித் தொழில் மந்திரி சபையிடம் அவர் மனுச்செய்துகொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த மனுவைக் கொடுக்கையில் உப்பு இலாக்கா அதிகாரி பின்வருமாறு எழுதியதாய்க் கூறப்படுகிறது:—

"இதுவரை இலங்கையர்கள் இத்தொழிலை விரும்பி மேற்கொள்ளவில்லை. இத்தொழில் கடினமானதுதான். தொழிலாளர்களும் அதிகாரிகளும் காலையிலிருந்து மாலைவரை கடுமையான வெய்யிலில் நின்று வேலைசெய்யவேண்டியிருக்கிறது. தவிர யானையிறவுப் பகுதி வாசஸ்தலத்திற்கு யோக்கியதையற்றதாகவுமிருக்கிறது. எனவே சம்பளம் அதிகரிக்கப்பட்டால் கூட இவ்வேலைக்கு வெளிமாகாணங்களிலிருந்து இலங்கையர்கள் வருவார்களாவென்பது சந்தேகம்தான்.

வீ-ரீ.

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய, சுற்றத்தாற் சுற்றப் படும்.

கதைப்பகுதி

# சுந்தரன்செய்த தந்திரம்

(முன்தொடர்ச்சி)

யாழ்ப்பாண ஆராய்ச்சிமார் சண்டவுடனே 'சுந்தரன் மிகு தந்திரிதான்'' கெட்டிக்காரன்தான் என்று தீர்மானித்துக்கொண்டார்கள். சுவரேறி விழுந்த சுந்தரனுக்குச் சற்றே காலில் நோவுண்டாயும் அதைப் பறுவாய் பண்ணுமல் இராவிராவாய் நடந்து விளாங்குளத்தில் இரவில் ஓர் வீட்டிற்புகுந்து அங்கிருந்த பழஞ்சோற்றுப்பானையையுந் தூக்கிக்கொண்டு இரண்டு சேலைகளையும் எடுத்துக்கொண்டு காட்டுட்போய் அதைக் குடித்துவிட்டு ஒருசேலையை எடுத்து மற்றதைத் தலையிற் சுற்றிக்கொண்டு அநுராசபுரத்தைநாடிப் போனுன்.

### சுந்தரன் அநுராசபுரம் சேர்தல்

சுந்தரன் பட்டினத்திற்குப் போகலாகாதென்று ஓர் மலையோரமாயிருந்த குடிசையிற் புகுந்தான். அவனைச்சண்டவர்கள் நீயார் என்றூர்கள். அப்போது சுந்தரன் சொல்லுகிறுன்: நான் மட்டுக்களப்பில் காத்தமுத்து வன்னியனரின் மகன். எனக்கு உலகவாழ்வில் இக்கட்டு நேர்ந்ததினுல் உலகத்தைத்துறந்து அநுராசபுரம்வந்து புத்தசந்நியாசியாக நினைந்தேன். அதையறிந்த பெற்ருேர் என்னை அடிக்கவும் நெருக்கவும் காவல்காக்கவுந் தொடங்கினர். என்கையில் ஒருசல்லியாவது இருக்கக்கூடாதென்று பறித்தெடுத்துக்கொண்டனர். நான் ஒரிரவில் வெளிப்பட்டுப் பசி பட்டினிகிடந்து அசப்பட்டஇடத்திற் பசியாறி இராவிராவாய் இங்குவந்து சேர்ந்தேன். பட்டினத்தில் மட்டுக்களப்பா ரிருக்கின்றனர். அங்கு சென்ருல் அவர்கள் வன்னியனுருக்கு அறிவித்து விடுவார்கள். அவர்களறிந்தால் என்விரதம் நிறைவேருது. ஆதலால் எனக்குச் சற்றே போசனமுந்தந்து தமிழறியா விகாரை ஒன்றுக்கு அனுப்பினுல் பெரும் புண்ணியமாகுமென்ருன். தந்திரமுள்ள சுந்தரன் அங்கே சிந்தனைசேருய் வந்தனனுகிலும் அந்தப் பவுத்தர் சொந்தமாய்த் தம்மத சிந்தனையாகி வந்தானென்று நாற்றிசையெங்கணுஞ் சாற்றியதாலே காற்றுப்போல வந்து தோற்றினர் பலபேர். இந்த இடத்தில் ஏன் வந்தேனென்று சுந்தரன் மிகுந்த சோகங்கொண்டான். அப்படி வந்தவர்கள் உன்சரித்திரத்தைச் சொல்லென்று அலட்டிக்கொண்டிருக்க இரு உன்னுஞ்சைமாரும் அங்கே வந்துவிட்டனர். ஓர் யாழ்ப்பாணத்தானும் அதேது சங்கதியென்று எட்டிப்பார்த்தான். சுந்தரனே "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பிசாசு'' என்பதுபோல எக்கமுற்றுக் குறுவேர்வை வேர்க்கப் பயமுற்ருன். அவனே நாளைக்குச் சங்கதிதெரிவிக்கிறேன். பட்டினியும் நித்திரையும் என்பலத்தைக் கெடுத்துவிட்டது: தலைக்கிறுதி உண்டாகிறதென்று இருந்தஇடத்திலே சாய்ந்துவிட்டான். இதைக்கண்ட உன்னுஞ்சைமார் நாளைக்குவருகிறேம், இவருக்கு நல்லுணவுகொடுத்து ஆதரியுங்களென்று சொல்லிப் போய்விட்டார்கள். சுந்தரனே சூரியன் எந்தநிமிஷம் அஸ்தமிக்குமென்று எதிர்பார்த்திருந்தான் அவனுக்கு ஒருநிமிஷம் ஒருவருடம்போலிருந்தது. ஐயையோ! என்சங்கதி வெளிவருமேல் "பலநாட்டிருடன் ஒருநாள் அகப்படுவான்'' என்பதுபோல என்பாடு யாதாய் முடியுமோவென்று வெகுவாய் யோசித்தான். அவ்வீட்டுக்காரர் பலகாரமுதலியன கொடுக்க வாங்கியுண்டான். இராவானவுடனே அறுசுவையுடன்கூடிய அமுதளித்தனர். அவனே வித்தியாசமான சாப்பாடாயிருந்தாலுந் திருத்தியாய்ச் சாப்பிட்டுத் தான் துயிலவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப்படியே அவர்கள் சிறந்த படுக்கையை விரிக்க அவன் அதிற் படுத்துக்கொண்டான்.

### சுந்தரன் அநுராசபுரத்திலிருந்து ஓடிப்போதல்

வீட்டுக்காரர் துயில்வதைப்பார்த்து அவன் படுக்கையில்விரித்த துப்பட்டியாதியவைகளையுங் கட்டிக்கொண்டு இராவிராவாய் ஓட்டம்பிடித்தான். அப்படியே பன்னகமத்தைச்சேர்ந்து அங்கே ஒருவிடுதியில் அவன் சுருட்டிவந்த படுக்கையை வைத்துவிட்டு இரண்டு மூன்றுநாள் தங்குவதாய்ச்சொல்லிச் சாதமுண்டு அன்றிரவு துயின்றவன் விடுதிக்காரர் நித்திரையாகவே அவன் அங்கிருந்த பணப்பெட்டியையுந்தூக்கிக்கொண்டு ஓட்டம்பிடித்தான். ஓட்டம்பிடித்தவன் இடையில் பணப்பெட்டியை ஒரு காட்டுச்குள் உடைத்துப்பார்க்க ஐந்து பவுண்வரையில் இருந்தது. அதை மடியில் வைத்துக்கொண்டு பெட்டியை எறிந்துவிட்டு வேகமாய் நடந்தும் ஓடியும் இராவிராவாய்ப் பயணஞ்செய்து கண்டியைச்சேர்ந்தான். அங்கு ஒருகடையில் அசனமருந்தி ஒரு சேலைக்கடையில் சேலைகளும் வாங்கியணிந்து நாவிதன் சாய்ப்புக்குப்போய்ச் சவரம்செய்வித்துச் சக்கிலியனிடம்போய் ஒரு செருப்புவாங்கி மாட்டிக்கொண்டு விகாரரூபமாய் ஓர் பிரபுவைப்போலக் கிணத்தனை என்ற இடம்போய்ச் சேர்ந்தான்.

### சுந்தரன் கிணத்தனையில் வியாபாரஞ் செய்தல்

சுந்தரன் அங்கே ஒரு கடையில் உட்புகுந்தான். அங்கிருந்து அக்கடைகாரருடன் ஓர் கடை திறக்கப் போகிறேன், அதற்காகவே வந்தேன் என்ருன். அவர்களோ தக்க மரியாதைசெய்து அவனை உபசரித்தனர். அவன் தான் திரிகோணமலை வாசியென்றும், யாழ்ப்பாணத்திலும் சொந்தக்காருண்டென்றும், தன்பெயர் கிருஷ்ணபிள்ளையென்றும் கனகசுந்தர முதலியாரின் மகனென்றுஞ் சொல்லிக்கொண்டான். சுந்தரனிருந்த டம்பமான வேஷத்தால் அவனை யாரும் பெரிய பிரபுவென்றும் அவனுல் தமக்கும் ஏதும் நன்மையுண்டாகுமென்றும் அங்குள்ள கடைக்காரர் நம்பிவிட்டார்கள். தான் சரக்குகளை அழைப்பிக்குமுன் எவ்விதசரக்கு இவ்விடஞ் செலழியுமென்று அறியவேண்டியிருக்கிறதென்று சொல்லிவிட்டு அதற்கான ஓரிடம் வாடகைக்கு எடுக்கவேண்டுமென்றுஞ் சொன்னுன். கடைக்காரரோ நல்ல பொறுப்பான சந்தியில் ஓர் மேல்மாடியுள்ள பெரியவீடிருக்குது; மாசம் நாற்பது இறைசால் வாடகையாம் கொடுப்பீரா என்ருர்கள். வீட்டைப் பார்ப்போமென்று சென்றவன் அப்படியே கொடுக்கச் சம்மதித்து அவ்வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டான். அப்பால் சில வேலைகாரர் வேண்டுமென்னவே, நானே நீயோவென்றுவந்து கூடிய சம்பளங்கேட்கவே அதற்குமுடன்பட்டு ஐந்துபேரை வேலைக்கமர்த்திக்கொண்டான். அவருள் ஒருவன் சமையற்காரன். அப்படி அமர்த்தியவுடனே ஒவ்வோர் கடைகளுக்குஞ் சென்று எனது கடைக்கு முதற்றரமான சாமான்கள்வேண்டும். அதை விற்பனவுசெய்து பார்த்து அதிலுந்திறமான சமான்களை அழைப்பித்து உங்களுக்குந் தருவேன். நீங்கள் அனுப்புஞ் சாமான்களைக் குறித்து வேறெருவரும் அறியப்படாதென்று தனித்தனியே சொல்லிச் சாமான்களையும் பார்த்து அதைப் பொழுதஸ்தமானத்தின்பின் தன்கடைக்சனுப்பும்படி ஒவ்வோர் கடைக்காரருக்கும் வெவ்வேறு நேரங்குறித்துச் சொல்லிவிட்டான். அப்படியே இவர்கள் அனுப்பிவிட்டார்கள். மறுநாள் அவன்கடை சாமான்களாற்றேங்கிற்று. அதைக்கண்டோர் புதுச்சாமான்கள் வந்திருப்பதாய் நினைத்து எல்லோரும் அங்கேபோய் அனேகசாமான்களை வாங்கினர். அவனுங்கூடியவரையில் மலிவாயே விற்ருன். ஆகையால் "கழுதைமயிர்பிடுங்கித் தீர்த்தமாடியதுபோல்'' எல்லாரும் ஒருவரைப்பார்த் தொருவர் வந்து குவிந்து சாமான்களை வாங்கியதினுல் உள்ளவேலைகாரர் போதாமலும் போயிற்று: அனுதல் அதிக லாபமும்வந்தது. உடனே அவன் அவ்வக் கடைகளுக்கு முற்பாக்கிகளையனுப்பி ஒவ்வொரு இரவிலும் வேறு சாமான்களை வாங்கி வைத்துவிடுவான். இவ்விதமே "நந்தவனத்துக்குக் களையும் காராம்பசுவுக்குப் புல்லும்'' என்ருற்போல அவன் நாணயஸ்தனுசவும் தொகையான லாபம்பெறவும் இடமாயிற்று. அவன் மிகுதிக்காசைக்கொடுத்து ஓர் பணிவிடைகாரனையனுப்பிப் புறவிடங்களிலிருந்துஞ் சாமான்களை அழைப்பித்தான். இப்படியே அவன் டம்பமாய்ச் சீவிக்கையில் மன்னுரிலிருந்து ஒவ்வோர்பகுதி ஆராய்ச்சிக்கும் ஓர் விளம்பரம் அனுப்பப்பட்டது. அதில் சென்றமாதம் 10-ந் திகதியின்பின் இதுவரையில் ஒவ்வோரிடத்திற்கும் வந்தவரில் ஐந்தடி எட்டிஞ்சு உயரமும் வலக்காலின் முழந்தாளின்கீழ் ஒரு கட்டுக்சட்டி அதில் மயிரில்லா வெண்தோல் ஒரு துட்டளவு காணப்படுபவனும் முன்வாய்ப் பல்லு ஒன்றில் ஒருமூலையில் ஒடிந்திருப்பவனுமான எவனேனும் இருந்தால் அவனைக் குறித்து இரகசிய ஆராய்ச்சிசெய்து அறிவிக்கும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையறிந்த ஆராய்ச்சிமார் அங்கங்கே விசாரித்தார்கள். கிணத்தனை ஆராய்ச்சியாரின் விசாரணையில் கனகசுந்தரமுதலியாரின்மகன் கிருஷ்ணபிள்ளையென்றபெயருள்ள ஒரு பெரியவியாபாரி வந்திருக்கிருரென்று கேள்வியுற்று அவரை நேரிற்காணும்படி வந்தார். அவனிருந்த டம்பாசாரத்தைக்கண்டு அவனை வெளியாய்ப்பரீட்சிக்க மனமேவப்படவில்லை. என்ருலும் கடையிலுட்கார்ந்து உமக்குச் சாமான் எங்கிருந்து வருகிறதென்ருர். அவனே எனக்கு மட்டுக்களப்பு யாழ்ப்பாணம் கொழும்புமுதலிய இடங்களிலிருந்து வருகிறதென்ருன். அங்கங்கே உமக்கு ஆட்களிருக்கிருர்களா என்ருர். ஆம் என்ருன். அதற்கிடையில் அவர் முன்வாய்ப்பல்லில் ஒடிவிருப்பதைக் கண்டுகொண்டார். கால்முட்ட வேட்டி உடுத்திருந்தமையால் காற்றழும்பைக் காண முடியவில்லை. உயரம் முன்பின்னுயிருக்குமென அவதானித்துக்கொண்டார். பின்பு சாமான் அனுப்புகிறவர்களின்பெயர் என்னவென்ருர். அவனே இது வியாபார விஷயமாதலால் நான் சொல்லக்கூடாதென்ருன். ஆராய்ச்சியாரோ மட்டுக்களப்பில் உமது பிதா சீவித்திருக்கிருரா என்ருர். அதற்கிடையில் அவன் சிந்தனை வேருகி ஓகோ நான் ஒருகருமத்தை மறந்துவிட்டேன்; அவசரம் மேல்மாடிக்குப் போகவேணுமென்று எழுந்து போய்விட்டான். அவன் படியில் ஏறுந்தருணம் "தாண்டிற்காரனுக்கு மிதப்பின்மேற்கண்'' என்பதுபோலக் காலைப்பார்த்தார். காலிலுந் தழும்பிருப்பதாய்த் தோற்றிற்று. ஆகையால் இவனே அவனென்று மனதுள் தீர்மானித்துக்கொண்டு வேறொருநாளில் வருகிறேனென்று முதலாளிக்குச் சொல்லும்படி கடையிலிருந்தவர்களிடஞ் சொல்லிவிட்டு வீடுசென்ருர்.

(தொடரும்)

### சந்தா விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5

இலங்கை, இந்தியாவுக்கு ரூபா $2\frac{1}{2}$


### விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

சிறு விளம்பரங்களுக்கு ரூபா $1\frac{1}{4}$

கலம் ஒன்றுக்கு ரூபா 3


நோயற்ற வாழ்வே



குறைவற்ற செல்வம்

## NAVARASA KALPAM

## நவரச கல்ப்பம்

பல நற்சாட்சிப் பத்திரங்களுடன் உலகப் பிரசித்தி பெற்றுவரும், மானிட வாழ்க்கையின் ஜீவ ஊற்றுக்கோர் கைகண்ட மருந்து. இந்த மருந்தைக் காப்பி, தேயிலை போல் பருகிவந்தால் சகல வியாதிகளையும் அடியோடு தொலைக்கும். நெஞ்சுச்சளி, அடைப்பு, இருமல், புகைச்சல்கள், கை கால் எரிவு, அமூல்வாதம், பிடிப்புகள், வெட்டைச் சூடுகள், சொறி சிரங்குகள், தேமல்கள் எட்டியும் பாராது உடம்பிற்கு நல்ல காந்தியும், பலமும் இரத்த விருத்தியும் உண்டாக்கும். சூடு, மேகம், மூத்திரச்சூடு, இரத்த வாதம், பித்த நோய்கள், பலவித புண்கள், ஞாபகக்குறைவு, எலும்புருக்கம் சூதகநோய், வாயுவின் தோஷம், சலரோகம், தொய்வு, காஷம், மலச்சிக்கல்கள், கிருமிகள், வாதப்பகுதிகள் முதலிய எண்பது வகைகளும் சுகமாகும். சிறிய குழந்தைகள், கெற்ப ஸ்திரீகள், பெரியவர்கள் காப்பி, தேயிலைபோல் எந்த நேரமும் உபயோகிக்கலாம்.

எம். ஏ. சரவணமுத்து
அண்டு கம்பெனி
மானிப்பாய், [மிட்லன்]
யாழ்ப்பாணம்.

### அட்டபந்தன மருந்து

சுத்தமாக எம்மாற் செய்யப்பட்ட மேற்படி மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன. தேவையானோர் எம்மிடத்தில் வந்தேனும், அல்லது தபால்மூலமாயேனும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
கு. கா. மதுரேஸ்வரக் குருக்கள்
சிவலிங்கப்புளியடி
வண்ணார்பண்ணை

### வல்லிபுர மான்மியம்

இப்பெயருடைய புத்தகம் எம்மிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை சதம் 10.

இதனை இயற்றிவர் துன்னாலை வடக்கு பிரமஸ்ரீ. ஆ. சபாரத்தினக்குருக்களவர்களாவர்.

### தமிழ் ஆசௌசதீபிகை

இதனை இயற்றியவரும் மேற்படி குருக்கள் அவர்களாம். இதன் விலை சதம் 40.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா"விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1939-ம் வருஷம் ஆனி மீ 30-ந் திகதி வெள்ளிக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.